27.01.2015

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## ஏக்கருக்கு 6,000 கிலோ நெல் அறுவடை: ஈரோடு மாவட்ட விவசாயிக்கு சிறப்பு விருது



வேளாண்மைத் துறையிடம் இருந்து நெல் விதை பெற்று, ஏக்கருக்கு 6 ஆயிரம் கிலோ வரை நெல் அறுவடை செய்த ஈரோடு மாவட்ட விவசாயிக்கு வேளாண்மைத் துறை சிறப்பு விருதை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் திங்கள்கிழமை வழங்கினார். சென்னை கடற்கரை சாலையில் நடைபெற்ற விழாவில் ஈரோடு மாவட்ட விவசாயிக்கு இந்த விருது வழங்கப்பட்டது. இதுகுறித்த விவரம்: வீரதீர செயல்களுக்கான அண்ணா பதக்கம் உள்பட பல்வேறு வகையான பதக்கங்கள் ஒவ்வொரு ஆண்டும் குடியரசு தின விழாவின் போது வழங்கப்படுவது வழக்கம். நிகழாண்டும் அதேபோன்று விருதுகள் வழங்கப்பட்டன. வீரதீர செயல்களுக்கான அண்ணா பதக்கம், திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த தீயணைப்பு நிலைய அலுவலர் பா.சிவக்குமார், வீரர்கள் அ.பழனிவேல் ராஜா, பா.ராஜபூபதி, கடலூர் மாவட்டம் காட்டுக்கூடலூர் கிராமத்தைச் சேர்ந்த ம.பார்த்தசாரதி, ஈரோடு மாவட்டம், வைரபாளையம் கிராமத்தைச் சேர்ந்த ப.கந்தசாமி ஆகியோருக்கு வழங்கப்பட்டது. இந்த விருது, ரூ.1 லட்சம் காசோலையும், ரூ.5 ஆயிரம் மதிப்புள்ள தங்க முலாம் பூசிய பதக்கமும், சான்றிதழும் அடங்கியது. கோட்டை அமீர் பதக்கம்: மத நல்லிணத்துக்காக பாடுபட்டு வருபவர்களுக்கு கோட்டை அமீர் மத நல்லிணக்கப் பதக்கம் அளிக்கப்படுகிறது. நிகழாண்டு ராமநாதபுரம் மாவட்டம்,

ஏர்வாடி கிராமத்தைச் சேர்ந்த துல்கருணை பாட்சாவுக்கு அந்தப் பதக்கம் வழங்கப்பட்டது. இந்தப் பதக்கம், ரூ.25 ஆயிரத்துக்கான கேட்பு காசோலை, சான்றிதழை உள்ளடக்கியது. காந்தியடிகள் காவலர் பதக்கம்: தமிழகத்தில் கள்ளச் சாராயத்தைக் கட்டுப்படுத்தும் பணியில் சிறப்பாகச் செயலாற்றிய திருச்சி மாநகர மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு கூடுதல் துணை ஆணையர் கே.பாலகிருஷ்ணன், காஞ்சிபுரம் மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் கே.சண்முகம், திருச்சி மண்டல மத்திய புலனாய்வுப் பிரிவு ஆய்வாளர் பி.பத்மாவதி, விழுப்புரம் மாவட்ட மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு உதவி ஆய்வாளர் எம்.பாபு ஆகியோருக்கு காந்தியடிகள் காவலர் பதக்கம் அளிக்கப்பட்டன. இந்தப் பதக்கம், ரூ.20 ஆயிரத்துக்கான காசோலையையும், பதக்கத்தையும் உள்ளடக்கியது. வேளாண்மைத் துறை சிறப்பு விருது: நிகழாண்டு ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டத்தைச் சேர்ந்த கே.பி.துரைசாமிக்கு வேளாண்மைத் துறை சிறப்பு விருது வழங்கப்பட்டது. அவர், திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்ப முறை மூலம் ஏக்கருக்கு 6 ஆயிரத்து 130 கிலோ அறுவடை செய்துள்ளார். இது மாநிலத்திலேயே அதிகபட்ச விளைச்சலாகும் என அரசு தெரிவித்துள்ளது. இந்த விருது, ரூ.5 லட்சமும், ரூ.3 ஆயிரத்து 500 மதிப்புடைய கசோலையும் பதக்கமும் அடங்கியதாகும். இந்த விருதுகள், பதக்கங்கள் அனைத்தையும் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் வழங்கினார்.

## <u>கால்நடை கிளை நிலையம் திறப்பு</u>

ஊத்தங்கரை அருகே உப்பாரப்பட்டியில், கால்நடை கிளை நிலைய திறப்பு விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. விழாவிற்கு, கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் டி.பி. ராஜேஷ் தலைமை வகித்து திறந்து வைத்தார். கால்நடைப் பராமரிப்புத் துறை இணை இயக்குநர் (பொ), மருத்துவர் கந்தசாமி வரவேற்றார். கிருஷ்ணகிரி தொகுதி மக்களவை உறுப்பினர் அசோக்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் பாலசுப்பிரமணியம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட ஆட்சியர் பேசியது: தமிழக முதல்வரின் சிறப்பு திட்டமான

விலையில்லா கறவைப் பசுக்கள், ஆடுகள் வழங்கும் திட்டம் வறுமையில் உள்ள ஏழைகளின் வாழ்வாதாரத்தை முன்னேற்றும் வகையில், மாவட்டத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த 3ஆண்டுகளில், 1,050 பயனாளிகளுக்கு, ரூ.365 லட்சம் செலவில் கறவைப் பசுக்களும், 14,271 பயனாளிகளுக்கு, ரூ.1805 லட்சம் செலவில் ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளன. ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியத்தில், கடந்த 3 ஆண்டுகளில், 1,494 பயனாளிகளுக்கு, ரூ.183 லட்சம் செலவில் ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. பிப்ரவரி மாதத்தில் 265 பயனாளிகளுக்கு, ரூ.35 லட்சம் செலவில் ஆடுகள் வழங்கப்பட உள்ளன. கால்நடைகளின் உடல்நலனை காக்கும் வகையில், கடந்த நிதியாண்டு நிதி நிலை அறிக்கையில் அறிவித்தபடி, 50 புதிய கால்நடை கிளை நிலையங்கள் தொடங்கப்பட உள்ளன. இதன் மூலம், உப்பாரப்பட்டி சுற்றுப் பகுதிகளான பேயனூர், கெங்கபிராம்பட்டி, புதூர், நாச்சகவுண்டனூர், ஜோதிநகர், மோட்டூர், கொட்டாவூர், ஊமையனூர் கிராமங்களில் உள்ள சுமார் 5,000 கால்நடைகள் பயன் பெறும் என்றார். விழாவில், ஊத்தங்கரை வட்டாட்சியர் நாகராஜ், ஒன்றியக் குழுத் தலைவர் கிருஷ்ணன், அதிமுக நகரச் செயலர் சிவானந்தம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## <u>வேளாண் அறிவியல் பல்கலை.துணை வேந்தர் நியமனம்</u>

பெங்களூரு வேளாண் அறிவியல் பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராக எச்.சிவண்ணா நியமிக்கப்பட்டுள்ளார். இது குறித்து பெங்களூரு வேளாண் அறிவியல் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: பெங்களூரு வேளாண் அறிவியல் பல்கலைக்கழகத்தின் காந்தி வேளாண் அறிவியல் மையத்தின் வேளாண் கல்லூரித் தலைவராக உள்ள டாக்டர் எச்.சிவண்ணா, பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராக நியமித்து ஆளுநர் வஜுபாய்வாலா உத்தரவிட்டுள்ளார். இவர் இப்பதவியை 4 ஆண்டுகள் வகிப்பார். ஷிமோகாவில் உள்ள வேளாண் கல்லூரியில் மரபணுவியல் மற்றும் தாவர இனப்பெருக்கத்துறை பேராசிரியராகவும், முதுகலை பட்டப்படிப்பு

ஆய்வுமையத்தின் இயக்குநராகவும் பணியாற்றிய அனுபவம் பெற்றவர் எச்.சிவண்ணா.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வேளாண் பொருட்கள் உற்பத்தியில் கிருஷ்ணகிரி முதலிடம்: கலெக்டர்**

கிருஷ்ணகிரி: வேளாண் பொருட்களை உற்பத்தி செய்வதில், கிருஷ்ணகிரி மாவட்டம், மாநிலத்தில் முதல் இடம் வகிப்பதாக கலெக்டர் ராஜேஸ் தெரிவித்தார். கிருஷ்ணகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில், தமிழ்நாடு பொதுப்பணித்துறை நீர்வள ஆதார துறை சார்பில், நிலையான முன்னேற்றத்திற்கான நீர் மேலாண்மை குறித்த கருத்தரங்கம், கலெக்டர் ராஜேஷ் தலைமையில் நடந்தது. நீர் வள ஆதார பொதுப்பணித்துறை செயற் பொறியாளர் பாலசுப்பிரமணியன் வரவேற்றார். வேளாண்மை இணை இயக்குனர் தமிழ் செல்வன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயற் பொறியாளர் சுருளிசாமி சிறப்புரையாற்றினார். கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சுமதி முன்னிலை வகித்தார். கருத்தரங்கை துவக்கி வைத்து, கலெக்டர் பேசியதாவது: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், பல்வேறு நீர் நிலைகள் பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது. அவற்றில் பாரூர் ஏரி, கிருஷ்ணகிரி அணை, கெலவலரப்பள்ளி அணை உள்ளிட்ட நீர் நிலைகள் மூலம் ஏராளமான விளை நிலங்கள் பயன் பெற்று வருகிறது. இருக்கின்ற நீர் நிலைகளை நாம் பாதுகாக்க வேண்டும். தண்ணீரை சிறப்பான முறையில் சேமிக்கவும், சிக்கனமாக பயன்படுத்தவும் கற்றுக்கொள்ள வேண்டும். மாநிலத்திலேயே, கிருஷ்ணகிரி மாவட்டம்தான் வேளாண்மை பொருட்கள் உற்பத்தி செய்வதில் முதலிடம் வகிக்கிறது. குறிப்பாக ராகி, துவரை, காய்கறிகள் கொய்மலர் சாகுபடி ஆகியவற்றை அதிக அளவில்

உற்பத்தி செய்து, அதிக மகசூலை எடுத்து வருகிறது. இது போன்ற விவசாயி களை கண்டறிந்து மாவட்ட நிர்வாகம் ஊக்குவித்து வருகிறது. அதே போல் விவசாயிகள் நீரின் அவசியத்தை தெரிந்து கொண்டு குறைவான நீரை பயன் படுத்தி புதிய விவசாய தொழில் நுட்ப யுத்திகளை கடை பிடிப்பதன் மூலம், மூன்று மடங்கு விளைச்சலை பெற முடியும். இவ்வாறு அவர் பேசினார். விவசாயிகள் சங்க தலைவர் ராமகவுண்டார், விவசாய சங்க ஆலோசகர் நசீர், விவசாய சங்க மகளிர் தலைவர் பெருமாகாசி, பள்ளி தலைமையாசிரியர் சின்னராஜ், மற்றும் பள்ளி மாணவர்கள் உட்பட பலர், கலந்து கொண்டனர். பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் சாம்ராஜ் நன்றி கூறினார்.

## <u>கால்நடைகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம்</u>

தஞ்சாவூர்: தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில், கக்கரை கிராமத்தில், சிறப்பு கால்நடை மருத்துவ முகாம் நடந்தது. கலெக்டர் சுப்பையன் துவக்கி வைத்தார். எம்.பி., பரசுராமன் முன்னிலை வகித்தார். நீண்ட நாட்களாக சினை பிடிக்காத, 79 மாடுகளுக்கு சிகிச்சை, ஒன்பது மாடுகளுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கப்பட்டது. மேலும், 1,037 கால்நடைகளுக்கு சிகிச்சை மற்றும் குடற்புழு நீக்கம் செய்யப்பட்டது. கோழிகளுக்கு குருணை மருந்து தடுப்பூசி, செல்ல பிராணிகளுக்கு தடுப்பூசி அளிக்கப்பட்டது. முகாமில், கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர், செல்வவிநாயகம், திருச்சிராப்பள்ளி அகில இந்திய வானொலி நிலைய பண்ணை இல்ல நிகழ்ச்சி பொறுப்பாளர் சரவணன், மாவட்ட கால்நடை பண்ணை துணை இயக்குனர் டேவிட் , பஞ்., தலைவர் தலைவர் அகிலாண்டேஸ்வரி கலந்து கொண்டனர்.

## <u>ஊட்டி ஆராய்ச்சி மையத்தில் பயிற்சி</u>

ஊட்டி : ஊட்டியில் உள்ள இந்திய மண் மற்றும் நீர்வள பாதுகாப்பு நிறுவனத்தின், ஊட்டி ஆராய்ச்சி மையத்தில், "வனப்பகுதிகளில் நீர் பிரி முகடுப்பகுதி மேலாண்மை' தொடர்பான பயிற்சி, இன்று துவங்கி வரும், 27ம்

தேதி வரை நடக்கிறது. இதில், இமாச்சல பிரதேசம், ஜம்மு, காஷ்மீர், மகாராஷ்டிரா, தமிழகம் உட்பட, 32 பயிற்சி வனச்சரகர்கள் பங்கேற்கின்றனர். அவர்கள் பல்வேறு களப்பயிற்சிகளில் ஈடுபட உள்ளனர். இன்று காலை, 10:30 மணிக்கு துவங்கும் பயிற்சியை, மலைப்பகுதி மேம்பாட்டு திட்ட இயக்குனர் சீனிவாச ரெட்டி துவக்கி வைக்கிறார்.

## நிலக்கடலை பயிரில் "படைப்புழுக்கள்' தாக்குதல்! இலைகளை தின்பதால் மகசூல் பாதிப்பு

பரமக்குடி : பரமக்குடி பகுதியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நிலக்கடலை பயிர்களை "படைப்புழுக்கள்' தாக்கி வருவதால், மகசூல் பாதிக்கும் நிலை உள்ளது. பரமக்குடி, நயினார்கோவில் ஒன்றியங்களுக்குட்பட்ட உரப்புளி, நென்மேனி, கீழாய்க்குடி, தினைக் குளம், பகைவென்றி, வல்லம், கள்ளிக் கோட்டை, லட்சுமணன் குடியிருப்பு, தென்னழகாபுரி பகுதிகளில் ஆயிரக் கணக்கான ஏக்கரில் நிலக்கடலை பயிரிடப்பட்டுள்ளது. பூக்கள் பூக்க ஆரம்பிக்கும் நிலையில் உள்ள நிலக் கடலை பயிரில், "படைப்புழுக்கள்' தாக்கியுள்ளன. இப்புழுக்கள் இலைகள் அனைத்தையும் தின்று நாசப் படுத்துவதால், மகசூல் பாதிக்கும் நிலை உள்ளது. இது குறித்து விவசாயிகள் கூறியதாவது: பெரியசாமி, லட்சுமணன் குடி யிருப்பு: ஏக்கருக்கு 60 கிலோ என்ற அளவில் நிலக்கடலை விதைகளை கிலோ 80 முதல் 90 ரூபாய்க்கு, சிங்கம்புணரியில் இருந்து வாங்கி, மிஷின் மூலம் விதைத் துள்ளோம். 8 முறை டிராக்டர் உழவு, 2 முறைகளை எடுத்தல் என இதுவரை ரூ.15 ஆயிரத்திற்கும் மேல் செலவாகி யுள்ளது. தற்போது புழுக்கள் தாக்கம் அதிகம் உள்ளது. மாதவி, கீழாய்க்குடி: கடந்த சில நாட்களாக இரவு நேரங்களில் புழுக்கள் படையெடுத்து வருகிறது. பகலில் மண்ணுக் கடியில் புகுந்து கொள்கிறது. இத்துடன் மழையும் இல்லா ததால் நஷ்டம் ஏற்படும் நிலை உள்ளது, என்றார். கண்ணையா, வேளாண் உதவி இயக்குநர்: புழுக்களை கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 35 கி.கி. பாசலோன் அல்லது 25 கி.கி. குயினோபால் மருந்தை தண்ணீரில் கலந்து

கைத்தெளிப்பான் மூலம் தெளிக்கலாம். இது குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப் பட்டுள்ளது, என்றார்.

**<u>வீடுகள் தோறும் காய்கறி தோட்டம்; அசத்தும் விசாலயன்கோட்டை</u>**

காரைக்குடி : வீடுகள் தோறும் காய்கறி தோட்டம் அமைத்து விவசாயத்தில் அசத்தி வருகின்றனர் கல்லல் ஒன்றியத்தை சேர்ந்த விசாலயன்கோட்டை கிராமத்தினர். காரைக்குடி அருகே விசாலயன்கோட்டை ஊராட்சிக்கு உட்பட்ட விசாலயன்கோட்டை, சாத்தம்பத்தி, சன்னவனம். விவசாயம் செழித்த பகுதி. பல ஆண்டுகளாக கருவேல மரங்கள் மண்டி காணப்பட்டது. பிழைப்பு தேடி வெளியூருக்கு சென்ற நிலையில், இப்பகுதியை "ரிலையன்ஸ்' நிறுவனம் தத்தெடுத்தது.விவசாயிகளை ஒன்று சேர்த்து விவசாய சங்கம் உருவாக வழி வகுத்தது. ரூ.43 ஆயிரத்துக்கு மரக்கன்று நடவு செய்தல், 19.39 லட்சத்துக்கு கண்மாய்களை தூர்வாரியது, ரூ.40.67 லட்சத்துக்கு உரம், விதைகள், சீமை கருவேல மரங்களை சுத்தம் செய்தல், வரப்பு அமைத்தல் போன்ற பணிகளை மேற்கொண்டது. விவசாயம் செய்யாதவர்களுக்கு ரூ.6 லட்சத்தில் ஆடு, மாடு, கோழி வழங்கப்பட்டது. வீடுதோறும் தோட்டம் என்ற திட்டத்தின் கீழ் ரூ.5 லட்சம் செலவில் தோட்டம் அமைத்து கொடுத்தது. மண்வள பாதுகாப்புக்காக ரூ.2.81 லட்சத்தில் சாண எரிவாயு, மண்புழு தொட்டி, குப்பைக்குழி மண் பரிசோதனை, ரூ.1.5 லட்சத்தில் விவசாய வளமையம் என விசாலயன் கோட்டையை சேர்ந்த விவசாயிகளுக்கு மட்டும் ரூ.77 லட்சத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.எம்.சேக்கி, விசாலயன்கோட்டை: வீட்டுடன் சேர்ந்த 50 சென்ட் இடம் உள்ளது. 20 ஆண்டாக சும்மா கிடந்த இடத்தில் கடந்த ஆண்டும், இந்த ஆண்டும் காய்கறி விவசாயம் செய்து வருகிறேன். வீட்டிலேயே மண்புழு உரம் தயாரிக்க, ரிலையன்ஸ் நிறுவனத்தினர் தொட்டி கட்டி தந்துள்ளனர். அதில், ஆட்டு எரு, மாட்டு சாணம் ஆகியவற்றை போட்டு நிரப்பி வருகிறோம். எங்கள் ஊரில் உள்ள அனைவருடைய வீட்டிலும் காய்கறி தோட்டம் உள்ளது.இயற்கை உரம்

மூலம் மட்டுமே காய்கறி விவசாயம் செய்து வருகிறோம். ஒவ்வொரு வீட்டிலும் சொந்த செலவில் போர்வெல் போட்டு வருகின்றனர். விசாலயன்கோட்டை விவசாயிகள் சங்க செயலாளர் கே.ஆர்.சொர்ணம் கூறும்போது: எங்கள் சங்கத்தில் 205 பேர் உறுப்பினர். 75 சதவீதம் பெண்கள். தலைவராக லூர்து மேரி உள்ளார். ரிலையன்ஸ் நிறுவனத்தினர் எங்கள் கிராமத்தை தத்தெடுத்து, விவசாயத்துக்குரிய இடு பொருட்களை இலவசமாக தந்தனர். விவசாயம் செய்யாதவர்களும் அடுத்த ஆண்டு விவசாயம் செய்யும் அளவுக்கு இடங்களை சுத்தம் செய்து வருகின்றனர். நெல் விவசாயமும் இயற்கை முறையிலேயே மேற்கொண்டு வருகிறோம். தற்போது இந்த விவசாயத்தால் ஊர் மக்கள் ஒற்றுமையாகியுள்ளோம், என்றார். பாராட்ட: 94431 83053.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>சாமந்தி பூ சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்</u>**

மரக்காணம், : மரக்காணம் ஒன்றியத்தில் வடநெற்குணம், ஆலங்குப்பம், நல்லூர், முன்னூர், நகர் உள்பட 100க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளது. இபபகுதியில் உள்ள பெரும்பாலானோர் விவசாயிகள். தங்களது விளை நிலங்களில் தர்பூசணி, மணிலா, கரும்பு, நெல் போன்ற பயிர்களை நடவு செய்வது வழக்கம். ஆனால் இந்த ஆண்டு எதிர்பாராதவிதமாக பருவ மழை பொய்த்து விட்டது. இதனால் இங்குள்ள பெரும்பாலான ஏரிகள், குளம் போன்று தண்ணீர் இல்லாமல் வறண்டு காணப்படுகிறது. இதுபோல் முக்கிய நீர் நிலைகள் வறண்டு போனதால், விளைச்சலுக்கு அதிக தண்ணீர் தேவைப்படும் பயிர்களை விவசாயிகள் நடவு செய்யவில்லை. இதற்கு மாற்றாக குறைவான தண்ணீரில் விளையக்கூடிய பயிர்களையே விவசாயிகள் நடவு செய்கின்றனர். இதில் சாமந்தி, சம்பங்கி, முல்லை, கனகாம்பரம் போன்ற

பூச்செடிகள் வளர்ப்பதற்கு குறைவான தண்ணீர் போதுமானது. மேலும் ஆட்கள், உரம் போன்றவைகளும் குறைந்த அளவில் தேவைப்படுவதால் இப்பகுதி யில் உள்ள பெரும்பாலான விவசாயிகள் தங்களது நிலத்தில் பூச்செடிகள் சாகுபடி செய்வதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். நெல் அறுவடை துவங்கியுள்ளதால் கொள்முதல் நிலையங்கள் திறக்க வேண்டும். விழுப்புரம், : விழுப்புரம் மாவட்டத்தில் நெல் அறுவடை துவங்கியுள்ளதால், நேரடி நெல்கொள்முதல் நிலையங்களை திறக்க வேண்டும், என விவசாயிகள் வலியுறுத்தினர். விழுப்புரம் மாவட்ட விவசாயிகள் குறை கேட்பு கூட்டம் ஆட்சியர் சம்பத் தலைமையில் நேற்று நடந்தது. வேளாண் இணை இயக்குநர் ராஜாமணி, மின்வாரிய மேற்பார்வை பொறியாளர் அசோகன் உள்ளிட்ட அதிகாரிகள் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் விவசாய சங்க பிரதிநிதிகள் பேசும்போது, விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 75 சதவீத ஏரிகள் சீரமைக்கப் படாமல் உள்ளது. மேலும் 1985, 1996ம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளத்தில் விவசாய கிணறுகள் தூர்ந்துள்ளது. இதனை சீரமைக்கவும், வாய்க்கால் வரத்துக்களை சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், என கூறினர். இதற்கு பதிலளித்து பேசிய பொதுப்பணித்துறை அதிகாரி, ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட ஏரிகள் கணக்கிடப்பட்டு சீரமைப்பு பணிகள் நடந்து வருகிறது. அதனுடன் மதகு சீரமைப்பும் நடக்கிறது. கிணறுகள் சரிசெய்ய அரசுக்கு தெரியப்படுத்தி சீரமைக்கப்படும். வாய்க்கால் வரத்துக்கள் சீரமைக்க இன்னும் நிதிஒதுக்கீடு செய்யவில்லை, என்றார். பின்னர் விவசாயிகள் பேசும்போது, கிராமப்புறத்துக்கு செல்லும் அரசு டவுன் பஸ்கள் பெரும்பாலான ஊர்களுக்கு நிறுத்தப்பட்டது. மேலும் பல பேருந்துகள் பஸ் ஸ்டாப்பில் நிற்பதில்லை. குறிப்பாக விழுப்புரம்-புதுச்சேரி மார்க்கத்தில் இயங்கும் அரசு பஸ்கள் திருபுவனை உள்ளிட்ட வழித்தடங்களில் நிற்பதில்லை. இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். விழுப்புரம் மாவட்டத்தில் நெல் அறுவடை துவங்கியுள்ளதால் நேரடி நெல்கொள்முதல் நிலையங்களை திறக்க வேண்டும். கரும்புக்கான அரசு அறிவிக்கும் தொகையை தனியார் ஆலைகள் கொடுக்க

புதுசட்டத்தை இயற்றிட வேண்டும். மாவட்ட நிர்வாகம் இது தொடர்பாக அரசுக்கு அறிக்கை அனுப்ப வேண்டும். வறட்சி பாதிப்பு குறித்து ஆய்வு நடத்த வேண்டும். மரவள்ளிகிழங்கு விலை கடும் வீழ்ச்சியடைந்துள்ளது. வியாபாரிகள் சிண்டிகேட் அமைத்து குறைந்த விலைக்கு மரவள்ளி கிழங்கை கொள்முதல் செய்கிறார்கள், என விவசாயிகள் பேசினர். மாவட்டத்தில், 5 இடங்களில் நேரடிநெல்கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டுள்ளது. மேலும் செஞ்சி உள்ளிட்ட இடங்களில் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும். நிறுத்தப்பட்ட பேருந்துகளை மீண்டும் இயக்கவும், பேருந்து நிறுத்தத்தில் நிறுத்தப்படாத டிரைவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும், என அதிகாரிகள் தெரிவித்தனர். மரவள்ளி கிழங்கு விலை முறைகேட்டை தவிர்க்க ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் மரவள்ளியை விவசாயிகள் விற்பனை செய்ய வேண்டும் என அதிகாரிகள் கேட்டுக்கொண்டனர். இதனிடையே கூட்டம் துவங்குதற்கு முன்பு, விவசாயி ஒருவர் ஆட்சியரின் இருக்கை அருகே வந்து அவரது கோரிக்கை தொடர்பாக இதுவரை 100 மனுவுக்கு மேல் கொடுத்துவிட்டேன். அதற்கு எந்தவித பதிலும் வரவில்லை. அதிகாரிகள் நடவடிக்கையும் எடுக்கவில்லை என தெரிவித்தார். உடனே அதிகாரிகள் அவரைஅங்கிருந்துஅப்புறப்படுத்தினர்.

விவசாயிகள்வலியுறுத்தல்

**<u>திருவெண்ணெய்நல்லூர் அருகே வேளாண் உதவி இயக்குனர் ஆய்வு</u>**

திருவெண்ணெய்நல்லூர், :திருவெண்ணெய்நல்லூர் அருகே உள்ள பெரியசெவலை கிராமத்தை சேர்ந்த விவசாயி துரையின் நிலத்தில், ஒருங்கிணைந்த விரிவாக்க திட்டத்தின் கீழ் துவரை, மஞ்சள் சாமந்தி, மிளகாய் செடிகள் பயிர் செய்துள்ளார். பயிர்களில், வரப்பு பயிர் சாகுபடி, துவரை நடவுமுறை ஆகியவற்றை திருவெண்ணெய்நல்லூர் வேளாண் உதவி இயக்குனர் இளவரசன் ஆய்வு செய்து, தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்கினார். தற்போது உள்ள பாசன நீர் சிக்கனத்தை கருத்தில் கொண்டு பயிர்

செய்யப்படும் கரும்புகளுக்கு சொட்டு நீர் பாசனம் அமைக்க வேண்டும், என்றார். தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் 75 சதவீதம் அதாவது எக்டருக்கு ரூ.84 ஆயிரத்து ஐநூறு மானியத்தில் சொட்டுநீர் பாசனம் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான ஆலோசனைகளை கிராமங்களுக்கு வரும் வேளாண் உதவி அலுவலர்களிடம் கேட்டு தெரிந்து பயனடைய வேண்டும், என்றும் கூறினார். வட்டார தொழில் நுட்ப மேலாளர் சங்கீதா, உதவி தொழில்நுட்ப மேலாளர் சதீஷ், வேளாண் உதவி அலுவலர் ராஜேஷ் ஆகியோர் உடனிருந்தனர்.

## <u>ஓமலூர் கால்நடை சந்தையில் ரூ.10 கோடிக்கு வர்த்தகம்</u>

ஓமலூர், : சேலம் மாவட்டம், ஓமலூர் அருகே பெருமாள்கோயில் கிராமத்தில் வாரந்தோறும் வெள்ளிக்கிழமை கால்நடை சந்தை கூடும். இதில், தமிழகத்தின் பல்வேறு பகுதிகள் மற்றும் வெளிமாநிலங்களில் இருந்து நாட்டு மாடுகள், காராம்பசு, ஜெர்சி பசு, டெல்லி எருமை, காளைகள் என அனைத்து வகை மாடுகள், ஆடுகள் உள்ளிட்டவை விற்பனைக்கு கொண்டுவரப்படும். இதேபோல் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்தும் வியாபாரிகள் கால்நடைகளை வாங்கிச்செல்வார்கள். இந்நிலையில் கடந்த மாதம் கேரளாவுக்கு ஏற்றிச்சென்ற 216 மாடுகளை கோவை அருகே சில அமைப்பினர் மடக்கி கொண்டு சென்று விட்டனர். இதனால், கேரளா உள்ளிட்ட வெளிமாநிலங்களைச் சேர்ந்த வியாபாரிகள் மாடு வாங்க வருவது குறைந்து போனது. இதையடுத்து, கால்நடை சந்தை வியாபாரிகள் மற்றும் வாகன உரிமையாளர்கள் நலச்சங்கம் சார்பில் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டதால் கடந்தவாரம் சந்தை நடக்கவில்லை. இதனால் வியாபாரிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். அவர்களின் நலம் கருதி பெருமாள் கோயில் கால்நடை சந்தை நேற்று (23ம் தேதி) கூடியது. சேலத்தில் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வியாபாரிகள் கால்நடைகளை வாங்க மற்றும் விற்க

வந்திருந்தனர். நேற்று கூடிய சந்தையில் ரூ.10 கோடிக்கு மேல் வர்த்தகம் நடந்ததாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

**<u>வேளாண் உற்பத்தி அதிகரிப்பு சாத்தியமே</u>**

கோவை, : தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், மத்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் தமிழக திட்டக்குழு ஆகியவை சார்பில் 'பத்தாண்டுகளில் நாட்டின் உணவு உற்பத்தியை இருமடங்காக்குவது' என்ற தலைப்பிலான கருத்தரங்கு வேளாண்மை பல்கலைக்கழக அரங்கில் நேற்று நடந்தது. இந்த கருத்தரங்குகளில் மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறையின் முன்னாள் செயலர் டி.ராமசாமி சிறப்பு விருந்தினராக பங்கேற்று உணவு உற்பத்தியை அதிகப்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பேசினார். வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் கே.ராமசாமி, வேளாண் ஆலோசனை மேலாண்மை நிறுவனத்தின் நிர்வாகி விஸ்வநாதன் உள்ளிட்டோர் பங்கேற்று பேசினர். கருத்தரங்கிற்கு பின், மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறையின் முன்னாள் செயலர் டி.ராமசாமி நேற்று நிருபர்களிடம் கூறியதாவது: வேளாண் உற்பத்தி விகிதம் 500 மெட்ரிக் டன்னாக உள்ளது. இந்த அளவுக்கு உற்பத்தி செய்வது புரட்சி கிடையாது. இந்த உற்பத்தி விகிதம் படிப்படியாக ஏற்பட்ட வளர்ச்சி ஆகும். இந்தியா சுதந்திரம் அடைந்த பின், உணவு விகிதத்தை அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதன் விளைவாக உணவு உற்பத்தியை அதிகரிக்க பசுமைப்புரட்சி ஏற்பட்டது. வேளாண் உற்பத்தியை அதிகரிக்க நம்நாட்டில் உள்ள தொழில்நுட்பங்கள் பெரும் பங்காற்றுகின்றன. ஆனால் உருவாக்கப் படும் தொழில்நுட்பங்களில் 2 சதவீதம் மட்டுமே தொழிற்சாலை களை சென்றடைகின்றன. ஆனால் வேளாண் உற்பத்தியை மேம்படுத்த கண்டுபிடிக்கப்பட்ட தொழில்நுட்பங்கள் 33 சதவீதம் விவசாயிகளை

சென்றடைந்துள்ளது. தொழில்நுட்பங்கள் விவசாயிகளை சென்றடைய வேளாண் உற்பத்தி மையங்கள் முக்கிய பங்காற்றுகின்றன. இயந்திரங்களின் வருகையால் விவசாயிகளின் பயன்பாடு எண்ணிக்கை குறைகிறது. இதுபோன்ற காரணங்களால் வெளியே செல்லும் விவசாய கூலி தொழிலாளர்களுக்கு வேலை தருவதற்கு பிற துறைகளும் முன்வருவதில்லை. நம்நாட்டில் உள்ள உணவு சேமிப்பு கிடங்குகளில் 30 சதவீதம் தானியங்கள் தேவைக்கு அதிகமாக, பயன்பாட்டுக்கு போக மீதமுள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. நம்நாட்டில் உள்ள 40 கோடிக்கு அதிகமான மக்கள் உணவு தானியத்தை வாங்கும் சக்தியற்றவர்களாக உள்ளனர். இதுவே கிடங்குகளில் உணவு தானியங்கள் இருப்பதற்கு முக்கிய காரணமாகும். வேளாண் உற்பத்தி யை அதிகப்படுத்த வேண்டும். வேளாண் உற்பத்தியை அதிகரிப்பது சாத்தியமான ஒன்றாகும். இவ்வாறு ராமசாமி கூறினர். இப்பேட்டியின் போது, வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் கே.ராமசாமி, வேளாண் ஆலோசனை மேலாண்மை நிறுவனத்தின் நிர்வாகி விஸ்வநாதன் ஆகியோர் உடனிருந்தனர்.

## <u>மே மாத கண்காட்சிக்காக தயாராகிறது ரோஜா பூங்கா</u>

ஊட்டி, : கோடை சீசனில் நடக்கும் கண்காட்சிக்கென ஊட்டி ரோஜா பூங்காவை தயார்படுத்த மலர் செடிகளை கவாத்து செய்யும் பணி துவங்கியுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் உள்ள ஊட்டியில் நிலவும் மிதமான சீதோஷ்ண நிலை யை அனுபவிக்க ஏராள மான சுற்றுலா பயணிகள் பிற மாவட்டங்கள், வெளி மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்தும் வருகின்றனர். குறிப்பாக கோடை சீசன் சமயத்தில் பள்ளிகளில் தேர்வு விடுமுறைகளை கொண்டாட ஏராளமான சுற்றுலா பயணிகள் ஏப்ரல், மே மாதத்தில் ஊட்டிக்கு அதிகளவில் வருவார்கள். கோடை சீசனை அனுபவிக்க வரும் பயணிகளை மகிழ்விக்கும் வகையில் ஆண்டுதோறும் மாவட்ட நிர்வாகம், தோட்டக்கலைத்துறை மற்றும் சுற்றுலாத்துறை ஆகியவை சார்பில் மலர் கண்காட்சி, ரோஜா கண்காட்சி, படகு அணிவகுப்பு மற்றும் போட்டிகள்

உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. கோடை விழா நிகழ்ச்சிகளில் ஒன்றாக ஊட்டி விஜயநகரம் பகுதியில் உள்ள ரோஜா பூங்காவில் ரோஜா கண்காட்சி நடத்தப்படுகிறது. தற்போது பூங்காவில் 4 ஆயிரம் வீரிய ரகங்களை கொண்ட 27 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ரோஜா செடிகள் உள்ளன. மேலும் இந்த ரோஜா பூங்காவில் பாரம்பரிய ரோஜாக்களுக்கு என தனி யாக இடம் உள்ளது. பாரம்பரிய ரோஜா பூங்காவில் உலகின் பல்வேறு நாடு களில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ரோஜா செடிகள் நடவு செய்யப் பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. கோடை சீசன் சமயத்தில் ரோஜா கண்காட்சி தயார்படுத்தும் வகையிலும் ஆண்டுதோறும் ஜனவரி மாத இறுதி அல்லது பிப்ரவரி மாத துவக்கத்தில் ரோஜா செடிகள் கவாத்து செய்யப்படும். அதன்படி வருகிற கோடை சீசன் சமயத்தில் நடக்கும் ரோஜா கண்காட்சிக்கென பூங்கா வில் உள்ள ரோஜா செடி களை கவாத்து செய்யும் பணிகள் நேற்று துவங்கின. கவாத்து பணிகளை கலெக்டர் சங்கர் துவக்கி வைத்தார். மூன்று அடுக்கு களை கொண்ட பூங்காவில் மேற்பகுதியில் இருந்து கவாத்து செய்யும் பணி களில் பூங்கா ஊழியர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ள னர். இந்நிகழ்ச்சியில் தோட்டக்கலை இணை இயக்குநர் மணி உட்பட பலர் கலந்து கொண்டனர். மேலும், கவாத்து செய்யப்பட்ட ரோஜா செடிகள் விரைவாக துளிர்விடும் வகையில் வெட்டப்பட்ட பகுதியில் மருந்துகள் போடப்பட்டு வருகிறது. கவாத்து செய்யப்பட்ட ரோஜா செடிகளுக்கு உர மிடும் பணிகளும் நடந்து வருகிறது. ரோஜா பூங்கா வில் மேற்கொள்ளப்பட்டு வரும் கவாத்து பணிகள் சில வாரங்களில் முடிந்து விடும். காவத்து செய்யப்படும் ரோஜா செடிகள் ஏப்ரல் மாதத்தில் பூக்க துவங்கிவிடும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## <u>உச்சத்தை எட்டியது முருங்கை விலை</u>

ஊட்டி, : சமவெளிப் பகுதிகளில் விளையும் காய்கறிகள் அனைத்தும் நீலகிரி மாவட்டத்திற்கு நாள் தோறும் கொண்டு வந்து ஊழவர் சந்தை மற்றும் மார்க்கெட்டுக்களில் விற் பனை செய்யப்பட்டு வரு கிறது. உழவர் சந்தையில் விவசாயிகள் காய்கறிகளை நேரிடையாக விற்பனை செய்வதால் மார்க்கெட்டை

விட விலை சற்று குறைவாக காணப்படும். அனைத்து காய்கறிகளுக்கும். ரூ.5 முதல் ரூ. 20 வரை குறை வாக இருக்கும். ஆனால், தற்போது உழவர் சந்தையில் முருங்கை கிலோ ஒன்று ரூ.160க்கு விற்பனை செய்யப்படுகிறது. மார்க்கெட்டில் இத னை காட்டிலும் கூடுதலாக காய்கறிகளுக்கு விலை வைத்து விற்பனைசெய்யப்படுவதாககூறப்படுகிறது.

**24ம் தேதி கூடலூரில் விவசாய சங்க கூட்டமைப்பு சார்பில் தேயிலை மேம்பாடு தேசிய மாநாடு**

ஊட்டி, தென்னிந்திய விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் கூடலூரில் 24ம் தேதி(நாளை) தேயிலை மேம்பாடு தேசிய மாநாடு நடக்கிறது. நீலகிரி மாவட்டத்தின் பிரதான தொழிலாக தே யிலை விவசாயம்இருந்து வருகிறது.ஆனால்,கடந்த சில ஆண்டுகளாக தேயி லை ஏற்றுமதி குறைந்த நிலையில், நீலகிரியில்உற்பத்தி செய்யப்படும் தேயி லைக்கு கிராக்கி குறைந்தது. இதன் காரணமாக, பசுந்தேயிலைக்கும் விலை வீழ்ச்சி ஏற்பட்டது. பெரும்பா லான சிறு விவசாயிகள்தேயிலை விவசாயத்தை கைவிட்டது மட்டுமின்றி, பிழைப்பு தேடிவெளி மாவட்டங்களுக்கு சென்றுவிட்டனர். வெளி மாநிலங்களை சேர்ந்த பலர் தற்போது நீலகிரிமாவட்டத்தில் உள்ள தேயிலை தோட்டங்களை விலைக்கு வாங்கி அதில், சொகுசு பங்களாகட்டத் துவங்கிவிட்டனர்.இன்னும் ஓரிருஆண்டுகளில் பெரும்பாலான தேயிலை தோட்டங்கள் அழிக்கப்பட்டு, கான்கிரீட் காடுகளாக மட்டுமே மா றும் நிலை ஏற்பட்டுள்ளது. கூடலூர் பகுதியில் பெரியதேயிலை தோட்ட அதிபர்கள் தங்களது தோட்டங்களை விற்றுவிட்டதால் அங்கு பணியாற்றி வந்த தொழிலாள்களின் நிலை மிகவும் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இந்நிலையில்,நீலகிரியின் முக்கிய தொழிலான தேயிலை தொழிலை மேம்படுத்தும் நோக்கில் தற் போது பல்வேறு அமைப்புகளம் இறங்கி பணியாற்றி வருகின்றன. இதில், விவசாயிகள் தொழிலாளர்கள் முன்னேற்ற சங்கம் மற்றும் சிறு தேயிலை விவசாயிகள் சங்கமும் இணைந்து 24ம் தேதி (நாளை) கூடலூரில் தேயிலை மேம்பாடு தேசிய மாநாட்டை நடத்துகின்றனர்.

இதில்,கேரளா, அசாம், கர்நாடகா போன்ற பகுதிகளில் இருந்து விவ சாய சங்கங்களை சேர்ந்த முக்கிய பிரதிநிதிகள், தேயிலை குறித்த ஆராய்ச்சி மேற்கொண்டு வரும் நிறுவனங்களை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், தேயிலை வாரியம், உபாசி அதிகாரிகள், தென்னிந்திய விவசாய சங்கங்களின் கூட்டமைப்பை சேர்ந்த முக்கிய நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொள்கின்றனர். இந்த மாநாட்டில், தேயிலை தொழிலை மேம்படுத்துவது குறித்தும், மத்திய அரசின் தொழில் மற்றும் வணிகவியல் துறை யின் கீழ் உள்ள தேயிலை விவசாயத்தை மாற்றி மாநில அரசின் வேளாண் மை துறையுடன் இணைக்க வேண்டும், மருத்துவ குண ம் நிறைந்த தேயிலையை பொதுமக்கள் மத்தியில் பிரபலப்படுத்துவது, தேயிலை தொழிற்சாலைகளுக்கு இலவச மின்சாரம் வழங்க கோரு வது என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்படவுள்ளது.

## <u>விளை நிலங்களில் பாதுகாப்பு பணிகள் தீவிரம்</u>

குன்னூர், நீலகிரி மாவட்டத்தில் தேயிலைக்கு கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு கடும் விலை வீழ்ச்சி ஏற்பட்டது. இதையடுத்து பெரும்பாலான விவசாயிகள் தங்களது தேயிலை தோட்டங்களின் நடுவே ஊடுபயிராக மலைத்தோட்ட காய்கறிகளை உற்பத்தி செய்ய துவங்கினர். மேலும் விளை நிலங்களில் உருளைக்கிழங்கு, பீன்ஸ், பீட்ரூட், கேரட், நூல்கோல், காலிபிளவர், முட்டைகோஸ் உள்ளிட்ட காய்கறி பயிர்களை பயிரி ட்டு வந்த பெரும்பாலான விவசாயிகள் குறைந்த செலவில் அதிக லாபத்தை ஈட்டி தரும் மேராக்காய் பயிரையும் உற்பத்தி செய்ய துவங்கினர். காட்டேரி, கரும்பாலம், சேலாஸ், கொலக்கம்பை, தூதூர்மட்டம், கிளிஞ்சடா, காசோலை, கத்தி, பாலடா, மஞ்சக்கம்பை உள்ளிட்ட இடங்களில் பல ஏக்கர் பரப்பளவில் மேராக்காய் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில், கடந்த டிசம்பர் கடைசி வாரத்தில் இருந்து பனிப்பொழிவு துவங்கியதால் மேராக் காய் பந்தல்கள் அனைத்தும் காய்ந்து அதன் மகசூல் முற்றிலுமாக குறைந்து விட்டது. இதில் காய்ந்து போன மேராக்காய் பந்தல்களை அகற்றி ஏற்கனவே நடவு செய்துள்ள

செடி களை கவாத்து செய்து அதற்கு உரமிட்டு மீண்டும் கொடிகள் நன்கு தழைத்து வரும் வகையில் விவசாயிகள் அதற்குண்டான பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இதனுடன் ஊடு பயி ராக கறிபீன்ஸ், புஸ் பீன்ஸ், பீட்ரூட் முள்ளங்கி, நூல் கோல், மணத்தக்காளி, சிறு கீரை உள்ளிட்டவைகள் பயிரிடப்படுகிறது. இதில் மலைத்தோட்ட விளை நிலங்களில் வனத்தில் இருந்து வரும் காட் டெருமை, காட்டுப்பன்றி உள்ளிட்ட வனவிலங்குகள் புகுந்து சேதப்படுத்தி வருகின்றன. இதனை கட்டுப்படுத்த விளை நிலங்களை சுற்றி சேலை, பிளாஸ் டிக் பேனர்கள், தார்பாய்கள் உள்ளிட்டவற்றின் மூலம் விவசாயிகள் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

## அரியலூர் மாவட்டத்தில் 11 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையம்

அரியலூர், : அரியலூர் மாவட்டத்தில் 11 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளது என கலெக்டர் தெரிவித்துள்ளார். அரியலூர் கலெக்டர் சரவணவேல்ராஜ் வெளியிட்டுள்ள அறிக்கை: அரியலூர் மாவட்டத்தில் 2014-15ம் ஆண்டில் சம்பா பருவத்தில் நடைபெ றும் அறுவடையை முன்னி ட்டு விவசாயிகள் பயன்பெறும் வகையில் 11 இடங்களில் நேரடி நெல் கொ ள்முதல் நிலையங்கள் செய ல்படுத்தப்பட உள்ளது. அதன்படி, அரியலூர் தாலு காவில் தூத்தூர், குருவாடி, ஏலாக்குறிச்சி, இலந்தைக்கூடம், கீழக்கொளத்தூர், காமரசவள்ளி ஆகிய கிராமங்களிலும், ஜெயங்கொண்டம் தாலுகாவில் முட்டுவாஞ்சேரி, கோடாலி கருப்பூர், கங்கைகொண்ட சோழபுரம், தா.பழூர், வாழைக்குறிச்சி ஆகிய கிராமங்களிலும் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டு 21ம் தேதி முதல் இயங்கி வருகின்றது. எனவே, விவசாய பெருமக்கள் அருகில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை பயன்படுத்தி கொள்ளலாம் என கலெக்டர் அதில் தெரிவித்துள்ளார்.

## செட்டிக்குளம் வளாகத்தில் சின்ன வெங்காயம் ரூ.2 லட்சத்திற்கு ஏலம்

பெரம்பலூர்,: செட்டிக்குளம் வெங்காய வணிக வளாகத்தில் 14டன் சின்ன வெங்காயம் ரூ.2 லட்சத்திற்கு ஏலம் எடுக்கப்பட்டது என கலெக்டர் தரேஸ்அகமது தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் தெரிவித்திருப்பதாவது : பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் தாலுகா, செட்டிக்குளம் வெங்காய வணிக வளாகத்தில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மூலம் திறந்த முறை ஏலம் நடத்தப்பட்டது. இதில் அடைக்கம்பட்டி, செட்டிக்குளம், நாட்டார்மங்கலம், கூத்தனூர், சிறுவயலூர், தேனூர், சத்திரமனை, பொம்மனப்பாடி, மாவலிங்கை, அடைக்கம்பட்டி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 54 விவசாயிகள் தங்களது சின்ன வெங்காயத்தினை திறந்த முறை ஏலத்திற்குக் கொண்டு வந்து விற்பனை செய்தனர். திருச்சி, செட்டிக்குளம், நாட்டார் மங்கலம், பொம்மனப்பாடி, பாடாலூர், இரூர், சிறு வயலூர், தேனூர், நாகலாபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 10 வியாபாரிகள் 195 மூட்டை அதாவது 13,882 கிலோ சின்ன வெங்காயத்தை ஏலமெடுத்தனர். இதில் சின்னவெங்காயம் அதிகபட்சம் கிலோ ரூ.24.50க்கும், விதை வெங்காயம் அதிகபட்சமாக கிலோ ரூ.34க்கும், சராசரியாக ஒரு கிலோ ரூ.15க்கும் விற்பனையானது. இதன் மூலம் ரூ.2 லட்சத்திற்கு விற்பனை நடைபெற்றது. அனைத்து விவசாயிகளுக்கும் பணம் உடனடியாக வழங்கப் பட்டது. இவ்வணிக வளாகத்தில் வாரந்தோறும் செவ்வாய், வியாழன், ஞாயிற்றுக்கிழமை களில் திறந்தமுறை ஏலம் நடந்து வருகிறது. எனவே விவசாயிகள் தங்கள் வெங்காய விளைபொருளை நன்கு சுத்தப்படுத்தி, தரம்பிரித்து வருகிற 25ம்தேதி ஞா யிற்றுக்கிழமை 10 மணிக்கு கொண்டு வந்து விற்பனை செய்து பயன்பெறலாம் எனத் தெரிவித்துள்ளார்.

## நவீன தொழில்நுட்பம் கையாண்டால் எள் பயிர் சாகுபடியில் கூடுதல் மகசூல் பெறலாம் உழவர் பயிற்சி நிலையம் தகவல்

அன்னவாசல், : புதுக்கோட்டை மாவட்டத்தில் சம்பா நெல் அறுவடைக்குப் பிறகு சாகுபடி செய்யும் எள் பயிரில் நவீன தொழில்நுட்பத்தை கடைப்

பிடித்தால் கூடுதல் மகசூல் பெறலாம் என்று குடுமியான் மலை உழவர் பயிற்சி நிலையம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து குடுமியான் மலை உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குநர் சாந்தி, புதுக்கோட்டை வேளாண் இணை இயக்குநர் ஷாஜ ஹான், வேளாண் அலுவலர் ராஜசேகரன் ஆகியோர் கூட்டாக வெளியிட்ட செய்திக்குறிப்பு: புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்போது சம்பா நெல் அறுவடை பணி தீவிர மாக நடைபெற்று வருகிறது. நெல் அறுவடைக்குப் பிறகு மாசிப் பட்ட எள் சாகுபடிக்கு விவசாயிகள் தயாராகி வருகின்றனர். நவீன தொழில்நுட்ப முறைகளை கையாண் டால் எள் சாகுபடியில் கூடுதல் மகசூல் பெறலாம். எள் பயிர் நீண்ட ஆணிவேர்களைக் கொண்டது. இதனால் நிலத்தை 3 அல்லது 4 முறை நன்கு உழுது மண் பொலபொலப்பாக உள்ள வாறு பக்குவப்படுத்த வேண்டும். இதனால்தான் எள்ளுக்கு ஏழு உழவு என்று பழமொழி கூறுவர். விதையளவு மற்றும் விதை நேர்த்தி: ஒரு ஏக்கர் பரப்புக்கு 2 கிலோ எள் விதைகள் போதுமானவை. விதைக்கும் முன் விதை மூலம் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்திட விதைநேர்த்தி செய்வது அவசியமாகும். ஒரு கிலோ எள் விதைக்கு 4 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி உயிரியல் மருந்தை லேசாக ஈரப்படுத்திய விதையுடன் கலந்து உலரவைத்து விதைக்க வேண்டும் அல்லது ஒரு கிலோ எள் விதைக்கு 2 கிராம் கார்பன்டாசிம் ரசாயனப் பூஞ்சாணக் கொல்லி மருந்தைப் பயன்படுத்தி விதைநேர்த்தி செய்து 24 மணி நேரம் வைத்திருந்த பின்னர் விதைக்க வேண்டும். விதைப்பு: 1 ஏக்கர் பரப்புக்கு 2 கிலோ எள் விதைகளை 4 பங்கு உலர்ந்த மணலுடன் கலந்து விதைக்க வேண்டும். வரிசை விதைப்பு செய்வது சிறந்ததாகும். விதைத்த 15ம் நாள் செடிக்குச் செடி அரையடி இடைவெளி விட்டு செடிகளைக் கலைத்துவிட வேண்டும். பின்பு விதைத்த 30ம் நாள் செடிக்குச் செடி ஓரடி இடைவெளி விட்டு மீண்டுமொரு முறை கலைத்துவிட வேண்டும். ஒரு சதுர மீட்டருக்கு 11 செடிகள் இருக்குமாறு பயிர் எண்ணிக்கையைப் பராமரிக்க வேண்டும். சரியான இடைவெளியில் பயிர் எண்ணிக்கையைப் பராமரிக்கத் தவறினால் செடிகள் குச்சி போல் வளர்ந்து கிளைகள் மிகுதியாக வாராது. இதனால் மகசூல் பெருமளவு குறையும். உர மேலாண்மை: இறவை எள் பயிருக்கு ஒரு ஏக்கர்

பரப்புக்கு 30 கிலோ யூரியா, 56 கிலோ சூப்பர் பாஸ்பேட், 15 கிலோ பொட்டா'; இவற்றில் பாதியளவு உரத்தை அடியுரமாகவும், மீதிப் பாதியளவு உரத்தை விதைத்த 35ம் நாளில் மேலுரமாகவும் இடலாம். 1 ஏக்கர் பரப்புக்கு 2 கிலோ மாங்கனீசு சல்பேட் நுண்சத்தினை 20 கிலோ மணலுடன் கலந்து விதைப்புக்குப் பின் சீராகத் தூவிவிட வேண்டும். இதனால் காய்கள் திரட்சியாக வளரும்; ஒரே சமயத்தில் முதிர்ச்சியடையவும் செய்யும். எனவே, எள் சாகுபடி செய்யும் விவசாயிகள் மேற்கண்ட வழிமுறைகளைத் தவறாது கடைப்பிடித்துக் கூடுதல் மகசூல் பெற வேண்டும். இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் ஆலோசனை தெரிவித்துள்ளனர்.

## துவரை விவசாயிகளுக்கு எக்டேருக்கு ரூ.7500 இடுபொருள் மானியம் கலெக்டர் தகவல்

புதுக்கோட்டை, : நடவு முறையில் துவரை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் எக்டேருக்கு ரூ. 7,500 வீதம் இடுபொருள் மானியம் வழங்கப்படுவதாக கலெக்டர் கணேஷ் தகவல் தெரிவித்துள்ளார். புதுக்கோட்டை கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறை தீர் நாள் கூட்டம் நேற்று நடைபெற்றது. கூட்டத்துக்குத் தலைமை வகித்து கலெக்டர் கணேஷ் பேசியதாவது: இம் மாவட்டத்தில் கடந்த ஆண்டும், நடப்பு ஜனவரி மாதத்திலும் இயல்பை விட குறைவாகவே மழை பெய்துள்ளது. மாவட்டத்தில் உள்ள 33 வேளாண் விரிவாக்க மையங்களில் 187.79 மெ. டன் நெல் விதைகளும், 1.83 மெ. டன் பயறு விதைகளும் நிலக்கடலை 5.500 மெ. டன் வீதமும் தற்சமயம் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. எனவே, விவசாயிகள் தரமான சான்று பெற்ற விதைகளை வேளாண் விரிவாக்க மையங்களில் இருந்து பெற்று சாகுபடி செய்து பயனடைய வேண்டும். மேலும், உரிமம் பெற்ற கூட்டுறவு மற்றும் தனியார் விற்பனை மையங்களிலும் சான்று பெற்ற விதைகள் கிடைக்கும். தற்போது டிஏபி 1104 மெ.டன், யூரியா 966 மெ. டன், பொட்டாஷ் 1420 மெ. டன், காம்ப்ளக்ஸ் உரம் 1129 மெ. டன் வீதம்

இருப்பு வைக்கப்பட்டு கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது நிலவிவரும் தட்பவெட்ப நிலை நெற் பயிரில் குலைநோய் வருவதற்கு சாதகமாக உள்ளது. எனவே, இந்நோயின் தாக்குதல் பொருளாதார சேத நிலைக்கு மேல் இருந்தால் டிரை சைக்ளோசோல் என்ற மருந்தை ஏக்கருக்கு 120 கிராம் வீதம் தெளித்து கட்டுப்படுத்த வேண்டும். நெற்பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை செய்து வரப்பில் உளுந்து அல்லது தட்டைப்பயறு சர்குபடி செய்து பயன்பெறலாம். சிறுதானிய பயிர்களான கேழ்வரகு, கம்பு, சோளம், சாமை மற்றும் குதிரைவாலி விதைகள் போதுமான அளவு வட்டார வேளாண் விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. இவற்றை விவசாயிகள் பெற்று பயனடையலாம். நடவு முறையில் துவரை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் ஒரு எக்டேருக்கு ரூ. 7,500 வீதம் இடுபொருள் மானியம் வழங்கப்படுகிறது. நடப்பாண்டில் இத்திட்டம் 350 எக்டேர் பரப்பளவில் செயல்படுத்தப்படுகிறது. மேலும் நடப்பாண்டில் நீடித்த நவீன கரும்பு சாகுபடி திட்டம் 150 எக்டேர் பரப்பளவில் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தில் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஒரு எக்டேருக்கு நீரில் கரையக்கூடிய உரம் உள்ளிட்ட இதர இடுபொருட்கள் ரூ.35 ஆயிரம் மானியத்தில் வழங்கப்பட உள்ளன என்றார்.கூட்டத்தில் வேளாண் இணை இயக்குநர் ஷாஜஹான் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

<u>**விவசாயிகளுக்கு மண் பரிசோதனை பயிற்சி முகாம்**</u>

பாபநாசம், : பாபநாசம் அருகே உள்ள அம்மாப்பேட்டை ஒன்றியம் இரும்புத்தலை கிராமத்தில் வேளாண்மைத்துறை, விவேகானந்தா ஊரக வளர்ச்சி மையம் சார்பில் இயற்கை உழவர் மன்ற விவசாயிகளுக்கு மண் பரிசோதனை விழிப்புணர்வு பயிற்சி முகாம் நடந்தது. பயிற்சியை அம்மாப்பேட்டை வட்டார வேளாண்மைத்துறை உதவி அலுவலர் சதீஷ்,

விவேகானந்தா சமூக கல்வி சங்க வேளாண் ஊரக வளர்ச்சி மைய அலுவலர் வேல் முருகன் நடத்தினார். முகாமில் பரிசோதனைக்கு மாதிரி மண் எடுக்கும்போது வயல் பரப்பிலி ருந்து 3 அடி உட்புறத்திலும், எரு, உரம் போடாத நிலப்பரப்பிலும் ஒன்றரை அடி ஆழத்தில் மண்ணை தோண்டி எடுத்து அதை ஒரே இடத்தில் குவித்து ஈர பதமில்லாத அளவுக்கு உலர வைக்க வேண்டும். பின்னர் அதை 4 பங்காக பிரித்து அதிலிருந்து அரை கிலோ மண்ணை எடுத்து பிளாஸ்டிக் பாக்கெட்டில் அடைத்து அத்துடன் ஒரு துண்டு சீட்டில் விவசாயியின் பெயர், முகவரி, நிலத்தின் சர்வே எண், மண் எடுத்த தேதி, தொலைப்பேசி எண்ணை குறிப்பிட்டு அருகில் உள்ள வேளாண்மை அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். அல்லது ஆடுதுறையில் உள்ள மண் பரிசோதனை ஆய்வுக்கூடத்தில் சமர்ப்பிக்கலாம். இதனால் மண்ணுக்கேற்ற பயிர்களை சாகுபடி செய்யலாம். அளவான உரங்களை பயன்படுத்தலாம். குறைந்த செலவில் அதிக மகசூல் பெறலாம் என்று விளக்கம் அளிக்கப்பட்டது. பயிற்சியில் இயற்கை உழவர் மன்ற பொறுப்பாளர்கள் கோபிநாத், சங்கர், முன்னோடி விவசாயிகள் முருகேசன், பாலமுருகன், பாபு உட்பட 30 விவசாயிகள் பங்கேற்றனர்.

## <u>தஞ்சையில் 30ம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம்</u>

தஞ்சை, : தஞ்சை மாவட்ட விவசாயிகள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் வரும் 30ம் தேதி நட க்கிறது. கலெக்டர் சுப்பை யன் தலைமை வகிக்கிறார். கூட்டத்தில் புதிய தொழில்நுட்பங்கள் குறித்து திட்ட விளக்கம் அளிக்கப்படுகிறது. இக்கூட்டத்தில் கலந்து கொள்ளும் விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள், நீர்பாசனம், கூட்டுறவு, கால் நடை, மின்சாரம், வேளாண் மை பொறியியல், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், தோட்டக்கலைத்துறை போன்ற விவசாயம் சார்ந்த கருத்துக்களை தெரிவிக்கலாம். குறைதீர்க்கும் முகா மில் பங்கேற்று கருத்துகளை தெரிவிக்க விரும்பும் விவசாயிகள் அன்றைய தினம் தங்கள் பெயர், ஊர் மற்றும்

வட்டாரத்தை காலை 8.30 முதல் 10 மணி வரை கணினி யில் பதிவு செய்து கொள்ள லாம். விவசாயிகள் அளிக் கும் மனுக்களை கணி னி யில் பதிவு செய்து ஒப்பு தல் பெற்று பின் மனுக்களை அளிக்கலாம். இவ்வாறு கலெக்டர் சுப்பையன் தெரிவித்தார்.

**<u>மக்காச்சோள பயிரை தாக்கும் பூச்சி கட்டுப்படுத்தும் வழிமுறை வேளாண் அதிகாரி விளக்கம்</u>**

சேதுபாவாசத்திரம், : சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பெரியசாமி வெளியிட்டுள்ள அறிக்கை: மக்காச்சோள பயிரை தாக்கும் பூச்சிகளில் மிக முக்கியமானது தண்டு துளைப்பான், கதிர் துளைப் பான் மற்றும் வேர் கருகல் நூற்புழு ஆகும். தண்டு துளைப்பான் தாக்கிய பயிர்களில் இலைகள் சுரண்ட பட்டிருக்கும், நடுக்குருத்து வாடி காய்ந்து இருக்கும். தண்டில் துவாரம் காணப்படும். இவற்றை கட்டுப்படுத்த விதைத்த 16வது நாள் குயினல்பாஸ்5 ஜி 6 கிலோ அல்லது கார்பரில்4 ஜி 8 கிலோ குருணை மரு ந்தை 20 கிலோ மணலுடன் கலந்து ஒரு ஏக்கர் பரப்பில் உள்ள செடியின் நடுக்குருத்தில் இடவேண்டும். குருணை இட தவறும்பட்சத்தில் விதைத்த 20வது நாள் குயினல்பாஸ்25 இ.சி 400 மில்லி அல்லது கார்பரில் 50 சத நனையும் தூள் 400 கிராம் மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கர் பரப்பில் தெளிக்க வேண்டும். வேர்கருகல் நூற்புழு தாக்கினால் இளம்செடிகள் கருகி காய்ந்துவிடும். இதை கட்டுப்படுத்த கார்போபியூரான் 3 ஜி குருணை மருந்து 12 கிலோவை ஒரு ஏக்கர் பரப் பில் நடவு குழியில் விதையுடன் இடவேண்டும். கதிர் துளைப்பான் தாக்குதலால் பால் பருவ மணிகள் சேதமடைந்திருக்கும். இதை கட்டுப்படுத்த கார்பரில் 10 சத மருந்து 10 கிலோ அல்லது கார்பரில் 50 சத நனையும் தூள் மருந்து 400 கிராம் இவற்றில் ஏதேனும் ஒன்றை பூக்கும் தருணத்தில் ஒரு முறையும், பின்னர் 15 நாட்கள் கழித்து ஒரு முறை யும் ஒரு ஏக்கர் பரப்பில் தெளிக்க வேண்டும்.

**<u>நெல் அறுவடைக்கு வாடகை இயந்திரம் விவசாயிகளுக்கு அழைப்பு</u>**

தஞ்சை, : நெல் அறுவடைக்கு வேளாண் பொறியியல் துறை இயந்திரங்களை வாடகைக்கு பெற்று பயன்பெற விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது. தஞ்சை மாவட்டத்தில் நடப்பு சம்பா பருவத்தில் நெல் அறுவடைக்கு வேளாண் பொறியியல்துறை அறுவடை இயந்திரங்களை பயன் படுத்தி கொள்ளலாம். டயர் வகை கதிர் அறுவடை இயந்திரம் மணிக்கு ரூ.875, செயின் வகை கதிர் அறுவடை இயந்திரம் மணிக்கு ரூ.1415 வாடகையாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தஞ்சாவூர் வருவாய் கோட்ட விவசாயிகள் மருத்துவக்கல்லூரி சாலை கிருட்டிணா நகரில் உள்ள அலுவலகத்தை நேரிலோ அல்லது 9443892830 என்ற கைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம். கும்பகோணம் வருவாய் கோட்டத்தில் உள்ள விவசாயிகள் 22, கோமதி காலனி, செக்காங்கண்ணி சாலை என்னும் முகவரியில் உள்ள அலுவலகத்தை நேரிலோ அல்லது 9442399911 என்ற கைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம். பட்டுக்கோட்டை வருவாய் கோட்டத்தில் உள்ள விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகம், பட்டுக்கோட்டை என்ற முகவரியில் உள்ள அலுவலகத்தை நேரிலோ அல்லது 9443918295 என்ற கைபேசி எண்ணிலோ அணுகி பயன்பெறலாம். வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகங்களில் வாடகை பணம் செலுத்துவோருக்கு முன்னுரிமை அடிப்படையில் நெல் அறுவடை இயந்திரம் ஒதுக்கீடு செய்யப்படும். இந்த வாய்ப்பை அனைத்து விவசாயிகளும் பயன்படுத்தி கொள்ளலாம். இவ்வாறு கலெக்டர் சுப்பையன் தெரிவித்துள்ளார்.

## விவசாயிகள் கண்டுபிடிக்கும் புதிய பயிர் ரகங்களை பதிவு செய்து பயன் பெறலாம் கலெக்டர் பேச்சு

திருவாரூர்,: திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் சார்பில் தாவர இரகங்கள் மற்றும் உழவர்களின் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் தஞ்சை வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் சாமிஅய்யன், வேளாண் இணை இயக்குனர் மயில்வாகனன், கூட்டுறவு

இணைப்பதிவாளர் ரவிச்சந்திரன், நபார்டு மாவட்ட வளர்ச்சி மேலாளர் ரவிசங்கர், வேளாண் துணை இயக்குனர் நடேசன், நீடாமங்கலம் அறிவியல் நிலைய தலைவர் சோழன் மற்றும் நெல்.ஜெயராமன், தஞ்சை சித்தர், லால்குடி செந்தில்குமார், மற்றும் விவசாய பிரதிநிதிகள், வேளாண் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். கருத்தரங்கை துவக்கி வைத்து கலெக்டர் மதிவாணன் பேசியதாவது, தாவர ரகங்கள் மற்றும் உழவர்களின் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், தாவர ரகங்களை பாதுகாப்பதற்கும் உழவர்கள் மற்றும் புதிய ரகங்கள் அபிவிருத்தியில் ஈடுபடும் வல்லுநர்கள் இல்லாது விஞ்ஞானிகள், இனப் பெருக்காளர்கள் உரிமைகளை பாதுகாக்க மத்திய அரசால் 2001ம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. இச்சட்டத்தின் முக்கிய நோக்கங்களாக தாவர மரபணு ஆதாரங்களை பாதுகாத்து பாரம்பரிய ரகங்களை பயன்பாட்டிற்கு கிடைக்கச் செய்து, அதன் மூலம் புதிய ரகங் களை உருவாக்க வழிவகுத்த உழவர்களை அங்கீகரித்து, அவர்களின் உரிமைகளை பாதுகாப்பது மேலும் உழவர்களினால் பாதுகாக்கப்பட்ட பாரம்பரிய ரகங் களைக் கொண்டு அதை தாவர மரபியல் வளம் சேமிப்பு கிடங்கில் சேமித்து, புதிய ரகங்களை உருவாக்க துணைபுரிவதை அங்கீகரித்தல், மற்றும் விஞ்ஞானிகள் உரிமைகளை பாதுகாப்பதன் மூலம் ரகங்களை மேம்படுத்துவது, புதிய ரகங் களை உருவாக்குவதற்கான ஆராய்ச்சியில் பொது மற் றும் தனியார் துறைகளின் முதலீட்டை ஊக்குவிப்பது, பாதுகாப்பான உயர்ரக விதை மேம்பாட்டின் மூலம் உயர்ந்த ரக தாவரங்கள் மற்றும் ரகங்கள் உழவர்களுக்கு கிடைக்கச் செய்திடுவது மற்றும் நாட்டின் விதை உற்பத்தி துறையின் வளர்ச்சிக்கு உதவுவது ஆகும். உழவர்கள் தங்கள் அனுபவத்தால் புதிய ரகத்தை கண்டறிந்தால் அவற்றை விஞ்ஞானிகள் போல் பதிவு செய்து உரிமை பெறலாம். இந்த சட்டத்தின்கீழ் பதிவு செய்த ரகங்கள் சாகுபடி செய்யும்பொழுது எதிர்பார்த்த பலனை தரவில்லை என்றால் உழவர்கள் இழப் பீடு பெற இச்சட்டத்தின் 39(2)ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆணையத் தால் எடுக்கப்படும் முடிவுகளுக்கு உழவர்கள் மேல்முறையீடு செய்ய விரும்பினால் ஆணைய தீர்ப் பாயம் அல்லது ஐகோர்ட்களில் வழக்கு தொடர

எந்த தொகையும் கட்ட வேண்டியதில்லை. மேலும் உழவர்கள் உரிமை சட்டம் பாகம் 26ன் கீழ் தனிநபரோ அல்லது குழுக்களோ லாப பங்கீடுகளை பெற தகுதியுடையவர்கள் ஆவர். எனவே உழவர்கள் தாங்கள் கண்டுபிடிக்கும் புதிய ரகங் களை உழவர் பாதுகாப்பு உரிமைகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்து பலனடையுமாறு விவசாயிகளை கேட்டுகொள்கிறேன். இவ் வாறு கலெக்டர் பேசினார்.

**<u>நீடாமங்கலம் அருகே நெல் அறுவடையின்போது கலெக்டர் மகசூல் மதிப்பீடு</u>**

நீடாமங்கலம்: நீடாமங்கலம் அருகேயுள்ள அனுமந்தபுரம் கிராமத்தில் வயல் அறுவடை பரிசோதனை யின் மகசூல் மதிப்பீட்டை கலெக்டர் மதிவாணன் போர்வையிட்டு ஆய்வு செய்தார். ஒரு வயலில் சாகுபடி செய்யப்பட்டுள்ள சி.ஆர். 1009 ரகம் நெல் வயலை தேர்வு செய்து 5 மீட்டர் அகலத்தில் கணக்கீடு செய்து கலெக்டர் முன்னிலையில் அறுவடை செய்து பரி சோதனை செய்யப்பட்டது. இதில் ஹெக்டேருக்கு 8,900 கிலோ மக சூல் பெறப்பட்டதாக கணிக்கப்பட்டது. ஆர்டிஓ மோகன்ராஜ், வேளாண்மை இணை இயக்குனர் மயில்வாகனன், வேளாண்மை அறி வியல் நிலைய தலைவர் சோழன், தஞ்சை வேளாண் கல்லூரி முதல்வர் முனை வர். அய்யன், புள்ளியியல் துணை இயக்குனர் இந்திரா நீடாமங்கலம் உதவி இயக்குனர் இளஞ்செழியன், வேளாண் மை அலுவலர் சத்தியா,உதவி அலுவலர் கோவிந்தராஜ் கலந்து கொண்டனர்.

**<u>குலைநோயை கட்டுப்படுத்த வேளாண் அதிகாரி ஆலோசனை</u>**

ராஜபாளையம், : பருவ மழை தாமதம் கா ரணமாக ராஜபாளையம் பகுதியில் நெற்பயிரில் குலை நோய் தாக்கியுள்ளது. இதைக் கட்டுப்படுத்துவது குறித்து வேளாண்மை உதவி இயக்குநர் கிருஷ்ணமூர்த்தி கூறியிருப்பதாவது: ராஜபாளையம் பகுதியில் பருவ மழை தாமதம் காரணமாக நெற்பயிரில் குலை நோய் தாக்குதல் ஏற்பட்டுள்ளது. இலைகள், தண்டு, கணுப்பகுதி, கதிர் ஆகியவை பூசனத்தால் தாக்கப்பட்டால் இதன் அறிகுறியை தெரிந்து கொள்ளலாம். இலைகளின் மேல் வெண்மை மற்றும் சாம்பல் நிற மைய

பகுதியில் காய்ந்த ஓரங்களுடன் கூடிய கண் வடிவ புள்ளிகள் காணப்படும். இப்புள்ளிகள் ஒன்று சேர்ந்து ஒழுங்கற்ற திட்டுகளை உருவாக்கும். நோய் தாக்கம் அதிகமாகும்போது, பயிர் முழுவதும் எரிந்தது போன்று இருக்கு ம். கதிர் வெளி வந்தவுடன் நெல் மணிகள் காய்ந்து விடும். கணுக்கள் கருப்பு நிறமாக மாறி உடையும். இதனை கணுக் குலை நோய் என்கிறோம். கழுத்துப் பகுதியில் சாம்பல் நிறம் முதல் பழுப்பு நிற புள்ளிகள் தோன்றி, கருப்பு நிறமாக மாறி, கதிர் மணிகள் சுருங்கி கதிர்கள் உடைந்து தொங்கும். இதை கழுத்துக்குலை நோய் என்கிறோம். கதிர் பருவ நிலைக்கு முன்பே கழுத்துப் பகுதியில் நோய் தாக்கினால் தானியங்கள் உருவாகாது. ஆனால் கதிர் பருவத்திற்குப் பின் தாக்குதல் ஏற்பட்டால், தானியம் உருவானாலும் அவை 'சாவி' யாக காணப்படும். எனவே, இந்நோய் தாக்குதல் காணப்பட்டால், தழைச்சத்தை தாமதமாக இட வேண்டும். ஏக்கருக்கு ட்ரைசக்ளோசோல் (பீம்) 200 கிராமினை 200 லிட்டர் தண்ணீருடன் கலந்து தெளிக்க வேண்டும். ட்ரைசைக்ளோசோல் மருந்தினை மற்ற பூஞ்சானக் கொல்லி மருந்துகளுடன் கலந்து பயன் படுத்த வே ண்டாம். வரப்புகளிலும், வாய்க்கால்களிலும் தெளிக்க வேண்டும். வயல் மற்றும் வரப்புகளில் உள்ள களைகளை அகற்ற வேண் டும். நடவு செய்த 45 நாட்களுக்குப்பின் ஒவ்வொரு 10 நாள் இடைவேளியில் சூடோமோனஸ் புளுரோசன்ஸ் ஒரு கிலோ பொடி யை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து 3 முறை தெளிக்க வேண்டும். சூடோமோனஸ் தேவையாள அளவு வேளாண்மை விரிவாக்க மையத்தில் இருப்பு உள்ளது. விவசாயிகள் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம். செயற்கை பைரித்திராய்டு மருந்தை உபயோகிக்கக் கூடாது' என வேளாண்மை உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

## <u>பாசிக் மூலம் விதை நெல் சாகுபடி செய்ய முடிவு விவசாயிகளுக்கு அழைப்பு</u>

புதுச்சேரி, : புதுச்சேரியில் விவ சாய உற்பத்தியை பெருக்கும் நோக் கில் புதுச்சேரியை சேர்ந்த விவசாயிகளுடன் கலந்தாய்வு கூட் டம் பாசிக் தலைமையகத் தில் நடந்தது. இக்கூட்டத் தில் நவீன வேளாண்மை, விவசாய

உற்பத்தி, வேளாண் இடுபொருட் கள், வேளாண் விதை உற் பத்தி சம்பந்தமாக விவசாயிகளிடம் குறை மற்றும் கருத்துகளை சேர்மன் அசோக் ஆனந்த் எம்எல்ஏ கேட்டறிந்தார். கூட்டத் தில் எடுக்கப்பட்ட முடிவு கள் குறித்து நிருபர்களிடம் கூறியதாவது: பாசிக் நிறுவனம் மூலம் நவீன வேளாண்மையை செயல்படுத்தும் விதமாக ஆதார விதையை குறைந்த விலையில் விவசாயிகளுக்கு வழங்கி விதை நெல் சாகுபடி செய்து அதன் மூலம் உற்பத்தியாகும் சான்று பெற்ற விதை களை வியாபார நோக்கில் வெளிச்சந்தியில் விற்க முடிவு எடுக்கப்பட்டது. நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் பாசிக் நிறுவனத்தை தொடர்பு கொண்டு தங்களது பெயரை விதை உற்பத்தி யாளர் பட்டியலில் சேர்த்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் விவசாயிகள் வரும் 27ம் தேதி முதல் பிப்ரவரி 2ம் தேதி வரை பதிவு செய்து பயன்பெறலாம். இவ்வாறு அவர் கூறினார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### <u>பரமத்தி வேலூரில் வெற்றிலை விலை உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி</u>

பரமத்தி வேலூர் மார்க்கெட்டுக்கு வெற் றிலை வரத்து குறைந்து உள்ளதால், அதன் விலை அதிகரித்து உள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

வெற்றிலைபயிரீடு

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் தாலுகா காவிரி கரையோர பகுதிகளில் உள்ள பாண்டமங்கலம், பொத்தனூர், வேலூர், அணிச்சம்பாளையம், பொய் யேரி, நன்செய் இடையாறு, பாலப்பட்டி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சுமார் ஆயிரம் ஏக்கரில் வெற்றிலை பயிர் செய்யப்பட்டு உள்ளது. இங்கு விளையும் வெற்றிலைகள் சேலம், ஊட்டி, கோவை, மதுரை, திண்டுக்கல் உள்ளிட்ட பல்வேறு மாவட் டங்களுக்கும், கர்நாடகா, ஆந்திரா, கேரளா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும் தினந்தோறும் லாரிகள் மற்றும் ரெயில்கள் மூலமாக

அனுப் பப்பட்டு வருகிறது. மேலும் பரமத்தி வேலூர் நான்கு ரோடு பழைய பைபாஸ் சாலையில் வெற்றிலை ஏல மார்க்கெட் உள்ளது. இங்கு வெற்றிலை ஏலம்நடைபெற்றுவருகிறது.

விலைஉயர்வு

கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் கற்பூரி இளங்கால் வெற்றிலை மார் 104 கவளிகள் கொண்ட சுமை ஒன்று ரூ.2 ஆயிரத்துக்கும், கற்பூரி முதியம் பயிர் வெற்றிலை ஆயிரம் ரூபாய்க்கும் ஏலம் போனது. இதேபோல வெள்ளைக்கொடி இளங்கால் வெற்றிலை சுமை ஒன்று ரூ.3,500-க்கும், வெள்ளைக்கொடி முதியம் பயிர் ஆயிரம் ரூபாய்க்கும் ஏலம் போனது. இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் கற்பூரி இளங்கால் வெற்றிலை மார் 104 கவளிகள் கொண்ட சுமை ஒன்று ரூ.3 ஆயிரத்துக்கும், கற்பூரி முதியம் பயிர் வெற்றிலை ரூ.1,500-க்கும் ஏலம் போனது. இதேபோல வெள்ளைக்கொடி இளங்கால் வெற்றிலை சுமை ஒன்று ரூ.4 ஆயிரத்துக்கும், வெள்ளைக் கொடி முதியம் பயிர் ரூ.1,500-க்கும் ஏலம் போனது. பரமத்தி வேலூர் பகுதியில் பெய்யும் பனி காரணமாக மார்க்கெட் டுக்கு வெற்றிலை வரத்து குறைந்து உள்ளது. இதனால் வெற்றிலையின் விலை அதி கரித்து இருப்பதாக விவசாயி கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

## <u>நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 10 காசுகள் உயர்வு 305 காசுகளாக நிர்ணயம்</u>

நாமக்கல், நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை 295 காசுகளாக இருந்து வந்தது. இந்த நிலையில் நேற்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டை கொள்முதல் விலையை 10 காசுகள் உயர்த்த முடிவு செய்தனர். எனவே முட்டை கொள்முதல் விலை 305 காசுகளாக உயர்ந்து உள்ளது. பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) வருமாறு:– சென்னை–330, ஐதராபாத்–315, விஜயவாடா, தனுகு–307, பார்வாலா–318, மும்பை–353, மைசூர்–321, பெங்களூர்–330, கொல்கத்தா–340, டெல்லி–331. கறிக்கோழி கிலோ ரூ.66–க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. நேற்று பல்லடத்தில் நடந்த கறிக்கோழி ஒருங்கிணைப்புகுழு கூட்டத்தில் கிலோவுக்கு

ரூ.2 உயர்த்த முடிவு செய்தனர். எனவே கறிக்கோழி விலை கிலோ ரூ.68 ஆக உயர்ந்து உள்ளது. முட்டைக்கோழி கிலோ ரூ.48–க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதன் விலையில் மாற்றம் செய்யப்படவில்லை.

## நடுப்பகுதியில் குலைதள்ளிய அதிசய வாழைமரம்



திருவரங்குளம் அருகே மேட்டுப்பட்டி கிராமத்தை சேர்ந்தவர் பாண்டியன். விவசாயி. இவர் வீட்டில் 2 வாழை மரங்கள் வளர்த்து பராமரித்து வருகிறார். இதில் ஒரு வாழை மரத்தின் மையப்பகுதியில் குலை தள்ளியுள்ளது. இதை அறிந்த அப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் கூட்டம், கூட்டமாக வந்து ஆச்சரியத்துடன் அந்த வாழை மரத்தை பார்த்து சென்றனர்.

## கூட்டுறவுத்துறை மூலம் கோழிப்பண்ணை அமைக்க ரூ.5½ கோடி கடன் உதவி கலெக்டர் ம.ரவிகுமார் தகவல்



தூத்துக்குடி, தூத்துக்குடி மாவட்டத்தில் கூட்டுறவுத்துறை மூலம் கோழிப்பண்ணை அமைக்க ரூ.5 கோடியே 42 லட்சம் கடன் உதவி வழங்கப்பட்டு உள்ளது.

### பொது சேவை மையம்

தூத்துக்குடி மாவட்டத்தில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுறவுத்துறை மூலம் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அரசு, தனியார் மற்றும் சமூகநலத்துறையின் சேவைகளை பொது மக்களுக்கு, குறிப்பாக கிராமப்புற மக்களுக்கு அவர்களின் இருப்பிடத்துக்கு அருகிலேயே

கொண்டு செல்லும் வகையில் கூட்டுறவு சங்கங்களில் பொது சேவை மையம் செயல்படுத்த அரசு உத்தரவிட்டது. அதன்படி தூத்துக்குடி மாவட்டத்தில் 165 கூட்டுறவு சங்கங்களில் பொது சேவை மையம் தொடங்கப்பட்டு வருமானச் சான்று, சாதிச் சான்று, இருப்பிடச் சான்று, கணவரால் கைவிடப்பட்டோர் சான்று, முதல் பட்டதாரி சான்று போன்ற சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகிறது. இந்த சேவை மையம் மூலம் கடந்த ஆண்டு வரை 99 ஆயிரத்து 347 சான்றிதழ்கள் வழங்கப்பட்டு உள்ளன. இதற்காக ரூ.49 லட்சத்து 67 ஆயிரத்து 350 கட்டணமாக வசூல் செய்யப்பட்டு உள்ளது. இந்த தொகையில் 40 சதவீதம் தொகையான ரு.19 லட்சத்து 86 ஆயிரத்து 940 மின்ஆளுமை சங்கத்துக்கு செலுத்தப்பட்டு உள்ளது.

<u>பண்ணை பசுமை நுகர்வோர் அங்காடி</u>

தூத்துக்குடியில் பண்ணை பசுமை நுகர்வோர் கடை தூத்துக்குடி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் 23–08–2014 அன்று தொடங்கப்பட்டது. இந்த கடை முற்றிலும் குளிரூட்டப்பட்ட கடையாக விரிவாக்கம் செய்யப்பட்டு உள்ளது. இங்கு தினசரி 3 முதல் 4 டன் வரை காய்கறிகள் கொள்முதல் செய்யப்பட்டு விற்பணை செய்யப்படுகிறது. பொங்கல் திருநாளையொட்டி ஒரே நாளில் ரூ. 4 லட்சத்து 26 ஆயிரத்து 255 மதிப்பிலான காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டு இருக்கிறது. இந்த கடை மூலம் இதுவரை சுமார் ரூ.2 கோடி அளவுக்கு காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டு இருக்கிறது. அம்மா மருந்தகத்தில் கடந்த 17–ந் தேதி வரை ரூ.16 லட்சத்து 36 ஆயிரம் மதிப்பிலான மருந்துகள் விற்பனை செய்யப்பட்டு இருக்கிறது.

<u>கோழிப்பண்ணை</u>

கிராமப்புற மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக 5 ஆயிரம் கறி கோழிகள் வளர்ப்புத்திட்டத்தை தமிழக அரசு அறிவித்து உள்ளது. இதில் தூத்துக்குடி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் நடப்பு நிதியாண்டில் 66 பேருக்கு ரூ.5

கோடியே 42 லட்சம் கோழிப்பண்ணை அமைக்க கடன் வழங்கி உள்ளது. இந்த திட்டத்தில் பயனாளிக்கு இருமாதத்துக்கு ஒருமுறை ரூ.50 ஆயிரம் மொத்த லாபம் கிடைக்கிறது. செலவு வகையில் ரூ.10 ஆயிரம் போக இதர லாபம் ரூ.40 ஆயிரம் கிடைக்கிறது. இதே போன்று மாற்றுத்திறனாளிகளுக்கு கடன் உதவி, கறவை மாடு வழங்குவதற்கு கடன் உதவி, பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பு மூலம் சுய உதவிக்குழுக்களுக்கும் கடன் உதவி வழங்கப்பட்டு உள்ளது. இந்த தகவலை மாவட்ட கலெக்டர் ம.ரவிகுமார் தெரிவித்து உள்ளார்.

**விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்: கண்மாய்களில் கருவேலமரங்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் கலெக்டர் ராஜாராமன் பேச்சு**



விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் கண்மாய்களில் உள்ள கரு வேல மரங்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்ப டும் என கலெக்டர் ராஜாராமன் கூறினார்.

குறைதீர்க்கும்நாள்கூட்டம்

விருதுநகர் மாவட்ட விவ சாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், கலெக்டர் ராஜாராமன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கலந்துகொண்ட விவசாயிகள், வேளாண்மைத் தொடர்பான பல்வேறு கோரிக்கை மனுக் களை வழங்கினர். விருதுநகர் மாவட்டத்தின் பயிர் சாகுபடி பரப்பு மற்றும் மழை அளவு குறித்த விவரங்களை வேளாண்மை இணை இயக் குனர் தெரிவித்தார். இதை தொடர்ந்து வறட்சியை தாங்கி வளரக் கூடிய கருவாச்சி ரக சம்பா நெல் விதை மானியத்தில் வழங்க கோரியமைக்கு, அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும். பூவாணி அரசு பழப்பண்ணை மூலம் தரமான மா ஒட்டுக் கன்றுகள் மற்றும் பஞ்சவர்ண ரக மாங்கன்றுகள் விவசாயி களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கவும், விவசாயிகளின் கோரிக்கைக்கு ஏற்ப கலெக்டர் ராஜராமன் சம்பந்தப்பட்ட துறையினருக்கு அறிவுரை வழங்கினார்.

விருதுநகர் மாவட்டத்தில் மக்காச் சோளம் அதிக பரப்பில் பயிரிடப்பட்டு விளைச்சல் பெறப்பட்டுள்ள நிலையில், விலை வீழ்ச்சி அடைந்துள் ளதை தொடர்ந்து கொள்முதல் நிலையம் அமைக் கவும், நெல் கொள்முதல் நிலையங்கள் விரைவில் திறக்கவும், பருத்தியினை கொள்முதல் செய்யவும் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். அதற்கு கலெக்டர் மக்காச் சோளம் கொள்முதல் செய்ய வேளாண் வணிக இயக்குனருடன் கலந்து ஆலோசித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். விவ சாயிகளின் கோரிக்கைக்கு இணங்க வத்திராயிருப்பு, சேத்தூர், கான்சாபுரம் மற்றும் ராஜபாளையம் பகுதியில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும் என்றார். மேலும் ராஜபாளையம் வட்டத்தில் தென்னையில் தஞ்சாவூர் வாடல் நோய் முதலான பல பூச்சி நோய்களை கட்டுப்படுத்தும் தொழில் நுட்பங்களை அனைத்து விவசாயிகளும் அறியும் வண்ணம், அட்மா திட்டத்தின் மூலம் பயிற்சி அளிக்கவும், வாடல் நோயினால் பாதிக்கப் பட்ட தென்னைமரங்கள் குறித்த விவரங்களை, தென்னை வளர்ச்சி வாரியத் திற்கு தெரியப்படுத்தி, புதிய கன்றுகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளவும், தென்னை யில் பயிர் காப்பீடு குறித்து விவசாயிகளுக்கு தெரியப் படுத்தவும் கலெக்டர் வேளாண்மை இணை இயக்கு னருக்குஅறிவுரைவழங்கினார்.

கருவேலமரங்கள்

பின்னர் கலெக்டர் பேசும் போது, பொதுப்பணித் துறை மற்றும் பஞ்சாயத்து யூனியன் கண்மாய்களில் உள்ள சீமை கருவேல மரங்களை அகற்ற வருவாய் துறை, வனத்துறை, பொதுப்பணித்துறை, ஊராட்சிகள், உதவி இயக்குநர் ஆகியோருடன் முத்தரப்பு கூட்டம் நடத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பட்டா நிலத்தில் உள்ள சீமை கருவேல மரங்களை அகற்றி, சம்பந்தப் பட்ட நில உரிமையாளர்கள் ஒத்துழைப்புதர வேண்டும். வத்திராயிருப்பு, கூமாப்பட்டி, சேதுநாராயணபுரம் பகுதி களில் தென்னை மரங்களில் காய்களை சேதப்படுத்தும் குரங்குகளை பிடித்து மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் விட நடவடிக்கை மேற் கொள்ளப் படும். கோவிலாங் குளம் ஊராட்சி தபசு ஊரணி யில் கழிவு நீர் தேங்குவதை தடுக்க, குடிநீர் வடிகால் வாரியம் மூலம்

நடவடிக்கைஎடுக்கப்படும்.

பாலம்

கான்சாபுரம் கிராமம் அத்திக் கோவில் அருகே சிற்றாற்றில் பாலம் மற்றும் சாலை மேற்குத்தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத் தின் கீழ் அமைக்கப்படும். விவசாயிகள் பயன்பெறும் வகையில், ஆவின் மூலம் அனைத்துப் பகுதிகளிலும் விவசாயிகளின் விருப்பத்தின் பேரில் பால் கொள்முதல் செய்யப்படும். வத்திராயிருப்பு, தம்பிப்பட்டி அருகில் காட் டாற்றின் ஓடையின் குறுக்கே பாலம் அமைக்கப்படும். இவ்வாறு அவர் பேசினார். கூட்டத்தில் வேளாண்மை இணை இயக்குனர் சுப்பையா, கலெக்டரின் நேர்முக உதவி யாளர்(விவசாயம்) செல்வம், வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய திட்டம்) பூவலிங்கம், வேளாண்மை துணை இயக்குனர் செண் பகராஜ் உட்பட அரசு அலு வலர்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.